# தமிழக சட்டப் பேரவை

## புதன்கிழமை, 1967 ஜூலை 12.

---

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணியளவில் **மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. சி. பா. ஆதித்தனார்** அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### 1. வினாக்கள்-விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நேற்று தள்ளிவைக்கப்பட்ட வினா எண். 234 இன்று முதலில் எடுத்துக்கொள்ளப்படும்.

### கரும்பு நாற்றங்கால் பண்ணைகள்

*234 வினா.—**திரு. எஸ். சிவசுப்பிரமணியன் :** மதிப்பிற்குரிய விவசாய அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கரும்பு வளர்ச்சித் திட்டத்தின்கீழ் 1966-ல் பல்வேறு இடங்களில் ஏற்படுத்தப்பட்ட கரும்பு நாற்றங்கால் பண்ணைகள் எத்தனை?

(இ) உதவித் தொகையாக வழங்கப்பட்டது எவ்வளவு?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** (அ) ஐயாயிரத்து இருநூற்றி ஐம்பத்தாறு கரும்பு விவசாயிகளின் பண்ணையில் நாற்றங்கால்களை கரும்பு பெருக்கு திட்டத்தின்கீழ் 1966-67-ல் நிறுவப்பட்டது.

(இ) இத் திட்டத்தின் கீழ் 1966-67 ஆண்டிற்கு ஒதுக்கப்பட்ட மானியத் தொகை நாலு லட்ச ரூபாய் பூராவும் விவசாயிகளுக்கு அளிக்கப்பட்டது.

**திரு. கே. வினாயகம் :** இந்த சுகர்கேன் நர்சரிக்கு ஏற்கனவே ஒதுக்கப்பட்ட தொகையைவிட இந்த ஆண்டு அதிகமாக ஒதுக்கியிருக்கிறதா? அப்படி பணம் அதிகமாக ஒதுக்கப்பட்டிருந்தால் அது நெல் விளைச்சலைப் பாதிக்காது என்று அரசாங்கம் கருதுகிறதா ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** புதிய உபதேசத்தை விவசாயிகள் கேட்கவில்லை. அப்படிப்பட்ட உபதேசத்தை மக்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். ஆகவே நெல் விளைச்சலைப் பாதிக்கலாம் என்ற நிலைமை இல்லை. சென்ற ஆண்டு இருந்த நிலைமையைத்தான் சொன்னேன். 5,256 கரும்புப் பண்ணைகளுக்கு உதவி கொடுக்கப்பட்டு கரும்பு உற்பத்தி செய்யப்பட்டிருக்கிறது. அந்த அடிப்படையில்தான் விவசாயிகளுக்குச் சலுகைகள் வழங்கியிருக்கிறோம். அதையொட்டி இந்தத் துறையிலே நல்ல நன்மை ஏற்பட்டிருக்கிறது.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** திருச்சி மாவட்டத்திலே உள்ள சிறுகமணிப் பகுதியில் கரும்புப் பயிர் பண்ணையினால் எந்தவிதமானப் பயனும் இல்லாமல் இருப்பதாலே அதை நெல் விளைவிக்கும் கழனியாக மாற்ற வேண்டுமென்ற கோரிக்கை அரசாங்கத்திற்கு வந்திருக்கிறதா? ஆம் எனில் அதைப்பற்றி பரிசீலனை செய்வதற்கு அரசாங்கம் முன்வருமா?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** அதைப்பற்றிய தகவல் அரசாங்கத்திற்குக் கிடைத்திருக்கிறது. அதை விவசாய இயக்குநர் நேரடியாகப் பார்த்து வந்திருக்கிறார்கள். அவர்கள் அங்கே கரும்புப் பண்ணையையே அபிவிருத்தி செய்யலாம் என்ற நோக்கத்தோடு சிபாரிசு செய்து இருக்கிறார்கள். ஏற்கனவே அந்தப் பண்ணை சரியாக நடைபெறாமல் பயனில்லாமல் இருந்தது உண்மைதான்.

திரு. சி. கோவிந்தராசன் : நெல்லிக்குப்பத்திலே உள்ள இ. ஐ. டி. பாரி கம்பெனியின் கேன்நர்ஸரி திட்டம் இதன்கீழ் வருகிறதா ? அப்படியென்றால் அதற்கு எவ்வளவு மானியம் கொடுக்கப்படுகிறது ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : தனிக் கேள்வி போட்டால் பதில் அளிக்கலாம்.

Thiru T. MARTIN : May I know from the Hon. Minister whether this Government will give incentive bonus to the cultivators of sugarcane?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : ஏற்கனவே மத்திய சர்க்காரால் கொடுக்கப்பட்டுவந்த போனஸை மத்திய சர்க்கார் நிறுத்தியிருக்கிறார்கள். கரும்பு விவசாயத்தில் ஈடுபட்டிருக்கிறவர்களுக்குப் பயிர்ப் பாதுகாப்புக்காக, 50 சத வீதமும் பெஸ்டிசைட்ஸ்க்கு 50 சத வீதமும் வழங்கப்படுகிறது. கரும்பு நடுவதற்கு ஒரு ஏக்கருக்கு மூன்று கணுவுள்ளவற்றிற்கு 15 ரூபாயும், இரண்டு கணுவுள்ளவற்றிற்கு 10 ரூபாயும் மானியம் வழங்கப்பட்டது. இருபது மைல்களுக்குள் இருந்து கொண்டுவந்தால் 10 ரூபாய் மானியமும், 20 மைல்களிலிருந்து 75 மைல்களுக்குள் இருந்து கொண்டுவந்தால் அவர்களுக்கு 40 ரூபாய் மானியமும், 75 மைல்களுக்கு மேல் உள்ள இடங்களிலிருந்து கொண்டுவந்தால் 150 ரூபாய் மானியமும் வழங்கப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினக்கள் 272, 273 தள்ளிவைக்கப்படுகின்றன.

### கைத்தறி நிதி கார்ப்பரேஷன்

* 274 வின.—திரு. வி. கே. கோதண்டராமன் : மதிப்பிற்குரிய கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

கைத்தறி நிதி கார்ப்பரேஷன் (Handloom Finance Corporation) மூலமாகத் தனி நபர்களுக்கு, கூட்டுறவுச் சங்கங்களுக்கு இன்றுவரை எவ்வளவு பணம் கடனாக வழங்கப்பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தனிப்பட்ட நெசவாளர்களுக்கு ரூபாய் 1,32,04,625 வரையிலும், காஞ்சீபுரம் காமாட்சியம்மன் கூட்டுறவு நூல்நூற்பு ஆலைக்கு 9 லட்சம் ரூபாயும், 10—5—1967 வரை கடன் வழங்க தமிழகக் கைத்தறி நிதிக் கார்ப்பரேஷன் ஒப்பளித்துள்ளது.

திரு. வி. கே. கோதண்டராமன் : சார், இந்த ஹேண்ட்லூம் பைனான்ஸ் கார்ப்பரேஷன் மூலமாகத் தனி நபர்களுக்கும், கூட்டுறவுச் சங்கங்களுக்கும் உதவி செய்தும்கூட கைத்தறி நெசவுத் தொழில் திடீர் திடீரென்று பாதிக்கக்கூடிய அளவுக்கு தானே இருந்து வருகிறது. ஆகவே இத்துடன் மேலும் கொஞ்சம் பணத்தை ஒதுக்குவதன் மூலம், கைத்தறி நெசவு ஜவுளியை இந்த பைனான்ஸ் கார்ப்பரேஷன் மூலமாகவே கொள்முதல் செய்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதின் மூலமாக கைத்தறி நெசவுத் தொழிலுக்குப் பாதுகாப்பு அளிக்க உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, கைத்தறி நெசவுத் தொழிலுக்குப் பாதுகாப்பு அளிக்கக்கூடிய முயற்சிகளை எல்லாம் அரசாங்கம் மேற்கொண்டிருக்கிறது. அவற்றிலே ஒன்றாகத்தான் இந்த முயற்சியும் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. அந்த வகையில்தான் இதற்கு 1,32,04,625 ரூபாய் வழங்கப்பட்டிருக்கிறது. 1965-ம் ஆண்டிலே 650 பேர்களுக்கும், 1966-ஆம் ஆண்டிலே 1,378 பேர்களுக்கும், 1967-ஆம் ஆண்டிலே 428 பேர்களுக்கும் கடன் வழங்கப்பட்டிருக்கிறது. வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய வேண்டுமென்று அக்கறை கொண்டுதான் ஸ்டேட் டிரேடிங் கார்ப்பரேஷன் மூலமாக அமெரிக்கா, ஆப்ரிக்கா போன்ற நாடுகளுக்கு எந்த எந்த ரகத் துணிகளை அனுப்பலாமோ அவற்றை அனுப்பு